**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.213/2021**
**Connected with**
**அசல் வழக்கு எண்.198 /2019**

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26–ம் நாள் செவ்வாய்க்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 26.09.2023 | தந்தை/கணவர் பெயர்: | கோவிந்தராஜ் |
| பெயர்: | சித்ராதேவி<br>(PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நாச்சியார்கோயில் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 47/2023 |
| தொழில்: | | | |

**<u>2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 26.09.2023</u>**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

அசல் வழக்கு எண்.198/2019-ல் 03.10.2019-ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.198/2019-ல் 09.03.2021-ல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.198/2019-ல் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். எதிர்வழக்குரையில் பாரா 5-ல் 6 ஏக்கர் 98 செண்ட் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.213/2021-ல் பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்த வழக்கில் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட 6 ஏக்கர் 98 செண்ட்டையும் வழக்கு சொத்தாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். அவற்றை எனது தகப்பனார் உயிருடன் இருந்தபோதே விற்பனை செய்ததுபோக மீதி சொத்திற்கு

மட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட 6 ஏக்கர் 98 செண்ட்டில் முதன் முதலில் விற்பனை செய்யப்பட்ட சொத்து தான் அசல் வழக்கு எண்.213/2021-ல் வழக்கு சொத்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறந்த பிறகு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வாதிகளாகிய நாங்கள் மற்றும் 1-ம் பிரதிவாதி ஆகியோர்கள் விற்பனை பத்திரம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தினை 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த பின்னர் தான் நாங்கள் மற்ற சொத்துக்களை கிரயம் பதிவு செய்து கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான்.

அசல் வழக்கு எண்.198/2019-ஐ தாக்கல் செய்த பிறகும் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்தோம் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நாங்களும் சகோதரர்களும் விற்பனை காலத்தில் ஒற்றுமையாக தான் இருந்து வந்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3-ல் 3-வரிசை குறிப்பாக 16 அயிட்ட புல எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் தாவா புல எண்.178/3-ம் 15 வது அயிட்டமாக  குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா புல எண் 2009-ம் ஆண்டே விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2-ல் ஜாமீன் சொத்தாக புல எண்.497/1 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண். 497/1-ம் எங்களுடைய குடும்ப சொத்து தான் என்றால் சரிதான். 2016-ல் வங்கிக்கு பணம் செலுத்தும் போது தாவா சொத்து சம்பந்தமான வில்லங்க சான்று பெற்று பார்த்தேன் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.3 ஆனது தாவா சொத்திற்கானது மட்டும் என்றும் இதர குடும்ப சொத்துக்களுக்கானது அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் ஆவணங்கள் வங்கியில் அடமானத்திலிருந்து பணத்தை கட்டி அசல் பத்திரங்களை மீட்டோம் என்றால் சரிதான். புல எண்.77/4, புல எண்.77/4 பி மற்றும் புல எண்.77/7 ஆகிய சொத்துக்களை 23.02.2012 அன்று ஆவண எண்.349/2012-ன்படி 1-ம் பிரதிவாதி ராமலிங்கத்திற்கு விற்பனை செய்துள்ளார் என்றால் அது

பற்றி எனக்கு தெரியாது. எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 6 ஏக்கர் 98 செண்ட்டும் எனது தகப்பனாருக்கு பாகபத்திரம் மூலம் கிடைக்கபெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.1. ஆக ஏற்கனவே குறியீடு செய்ப்பபட்டுள்ளது. எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட பி அட்டவணை சொத்தில் புல எண்.77/4, புல எண்.77/7 ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

எனது தகப்பனாருக்கு வா.சா.ஆ.1 ன் மூலம் கிடைக்கபெற்ற சொத்துக்கள் தற்சமயம் யார் வசத்தில் இருந்து வருகிறது என்றால் எனது தகப்பனார் உயிருடன் இருந்த போதே தாவா சொத்தை தவிர இதர சொத்துக்களை விற்பனை செய்து விட்டார். தாவா சொத்து எனது தகப்பனார் இறந்த காலத்தில் யாருடைய வசத்தில் இருந்தது என்றால் துரைசாமி என்பவரிடம் அடமானத்தில் இருந்தது. அடமான பத்திரம், அடமான ரத்து பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஜாமீன் சொத்ததாக காண்பிக்கப்பட்டுள்ள புல எண்.497/1 நாங்களும் 1-ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் விற்பனை செய்தோம் என்றால் சரிதான். அது மனோகரன் என்பவருக்கு விற்பனை செய்தோம். எந்த வருடம் விற்பனை செய்தோம் என்றால் 2016 ஆம் ஆண்டு.

இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு நாங்களும் 1-ம் பிரதிவாதியும் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்து ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி சொத்தை வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் அது ஏற்கனவே எனது தகப்பனார் விற்றுவிட்டார் என்பதால் அதை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. எனது வழக்குரையில் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டது போக தாவா சொத்து மட்டும் தான் மீதம் இருப்பதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லியுள்ளோம். 17.11.2017-ல் தாவா சொத்தை பாகப்பிரிவினை கோரி மயிலாடுதுறை வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். அது

என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆகும். அது பி.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யபப்படுகிறது. அதற்கு 2-ம் பிரதிவாதி எனது வழக்கறிஞர் மூலம் பதில் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான்.அது என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆகும். அது பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பதில் சட்ட அறிவிப்பில் தாவா சொத்தை பொருத்து 06.05.2009-ல் போக்கிய கடன் ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

துரைசாமியிடம் எனது தகப்பனார் பெற்ற கடனுக்காக போக்கிய சீட்டு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் எவ்வளவு கடன் துரைசாமியிடம் பெற்றிருந்தார் என்றால் ரூ.1,00,000/- பெற்று கொண்டு அதை அவர் உயிருடன் இருக்கும் போதே கடனை அடைத்துவிட்டார். கடன் அடைத்த விவரம் எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியிடம் 06.05.2009-ல் அடமானம் வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவாவிற்கு பிறகு 1-ம் பிரதிவாதியை கேட்டதற்கு தாவா சொத்தை தெரியாமல் விற்றுவிட்டதாக கூறினார். 1-ம் பிரதிவாதிக்கு 2-ம் பிரதிவாதிக்கு எவ்வளவு ரூபாயக்கு விற்பனை செய்தார் என்ற விவரம் நான் கேட்கவில்லை.

எனது தாயார் எனது அண்ணாவும் ஒரே வீடடில் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. சுமார் 3, 4 ஆண்டுகளாக தனித்தனியாக தான் வசித்து வருகிறார்கள். எனது தாயார் மற்றும் எனது சகோதரருக்கு குடும்ப அட்டை, தேர்தல் அடையாள அட்டை ஒரே முகவரியில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். நாங்கள் எல்லோரும் ஒன்றாக ஒற்றுமையாக இருந்து வருகிறோம் என்றும் 2-ம் பிரதிவாதியிடம் பணம் பறிப்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து யாருடைய அனுபவித்தில் உள்ளது என்றால் 2-ம் பிரதிவாதியின் அனுபவித்தில் தான் உள்ளது. எனது தகப்பனார் சொத்தில் எனது அண்ணாருக்கு கிடைக்ககூடிய பாக விஸ்தீரணத்தை விட தாவா சொத்து விஸ்தீரணம் குறைவாக உள்ளது என்றால்

சரிதான். 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த விற்றபனையை ஏற்றுக்கொண்டு அதை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1.-ல் குறிப்பிடப்பட்டுள்ள எப் அட்டவணை சொத்திலும் எனது தகப்பனாருக்கு பாகம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1-ன்படி எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர் உயிருடன் இருந்த வரை எவ்வித விற்பனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் விற்பனை செய்தது சம்பந்தமாக எவ்வித ஆவணமும் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது தகப்பனார் விற்பனை செய்த சொத்துக்கள் குறித்து விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் சொத்துக்களை விற்பனை செய்துவிடடார் என்ற விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

அசல் வழக்கு எண்.198/2019 என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் 1-ம் பிரதிவாதிக்கு 2-ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த ஆவணம் செல்லாது என தாக்கல் செய்துள்ளோம். 2019 ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்த காலத்தில் எனக்கும் எனது சகோதரருக்கும் கருத்துவேறுபாடு இருந்தது. 2019 ஆம் ஆண்டே பாகப்பிரிவினைக்காக வழக்கு தாக்கல் செய்யாதற்கு ஏதேனும் காரணம் உண்டா என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.198/2019-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் விவரம் எனக்கு தெரியாது. எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் உண்மை என்பதால் தான் அது குறித்து மறுக்காமல் தற்சமயம் தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறக்கும் சமயத்தில் வீட்டு உபயோக பொருட்கள் இருந்தன ஆனால் நகைகள் இல்லை. வா.சா.ஆ.1.-ல் எனது தகப்பனாருக்கு கிடைக்கபெற்ற அனைத்து சொத்துக்களையும் சேர்த்து தான் பாகப்பிரிவனை வழக்கு தாக்கல் செய்ய இயலும் என்றும் நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு பகுதி பாகப்பிரிவனை என்ற காரணத்தினால் தள்ளுபடி

செய்யதக்கது என்றால் சரியல்ல. அனைத்து விவரங்களும் எனது தாயாருக்கு தெரியும் என்றும் அவர் நீதிமன்றம் வந்து சாட்சியம் அளித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு 1-ம் பிரதிவாதியின் தூண்டுதல் பேரில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சார்பதிவகத்திலிருந்து 1-ம் பிரதிவாதியின் துணையுடன் தான் ஆவணங்கள் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 எனது அண்ணாருக்கு வழங்கப்பட்டதா கண்டுள்ளது என்றால் சரிதான். எனது அண்ணிடமிருந்து நாங்கள் நேரிடையாக பெறவில்லை, அடுத்தவர் மூலமாக வாங்கி தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.4 ஆனது வா.சா.ஆ.2-க்கு பின்னிட்டு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆனது வழக்கிற்காக பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

1-ம் பிரதிவாதி ஏற்கனவே தோன்றா தரப்பினாராக ஆக்கப்பட்டுள்ளார்.

மறுவிசாரணை இல்லை.